

# மின்நிலா

ஜூன் 15, 2020



engalblog.blogspot.com

==========================================

"எங்கள் ப்ளாக்"
வலைப்பூவின்
வாராந்தர
வெளியீடு.

==========================================

மின் நிலா பற்றிய
உங்கள் கருத்துகளை engalblog@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

==========================================

அட்டைப்படம் : ஊட்டி மலர்க்கண்காட்சி 2020


படம் அனுப்பியவர் : K G Visuweswaran.

# ஆசிரியர்கள் :

B SRIRAM
K G GOUTHAMAN
KAYJEE
K G Y RAMAN
K S

உள்ளே ...


| பொருள் | பக்கம் |
|---|---|
| பாகற்காய் பிட்லா/லை -<br>கீதா ரெங்கன் ரெஸிப்பி. | 5 |
| | |
| புது வீடு - சிறுகதை :<br>எழுதியவர் : துரை செல்வராஜூ. | 11 |
| | |
| உங்கள் கேள்விகள், எங்கள் பதில்கள் | 19 |
| | |
| சின்னப் பாட்டி என்னும் தர்மாத்மா :<br>எழுதியவர் : KGY ராமன். | 28 |
| | |
| எழுதுபொருள் பற்றி மேலும் அரட்டை | 31 |
| | |
| டீனேஜ் ஆசை :: ஸ்ரீராமின் அரட்டை அரங்கம் | 33 |
| | |
| நாடக விமரிசனம் இரு வீடு ஒரு வாசல் ::<br>இரா அர்விந்த் . | 46 |
| | |
| ராட்ஷசன் (கவிதை!) :: ஜீவி | 52 |
| | |
| சினிமாப்பாட்டு இந்த வார எங்கள் choice | 55 |
| | |
| பாசிடிவ் செய்திகள் | 58 |
| | |
| மதராஸ் பிறந்த கதை :: ரமா ஸ்ரீநிவாசன் | 63 |
| (பழங்கணக்கு) மைதா பக்கோடா - ரெசிப்பி<br>எழுதியவர் : பானுமதி வெங்கடேஸ்வரன் | 73 |



# பாகற்காய் பிட்லா/லை

## - கீதா ரெங்கன் ரெஸிப்பி .

ஹாய்! எல்லா எபி கிச்சன் ரசிகப் பெருமக்களுக்கும் எங்கள் அன்பார்ந்த வணக்கம். பாகற்காய் பிடிக்காதவங்க எல்லாரும் கண்ணை மூடிக் கொண்டு சாப்பிடுங்க!

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு வகையில். பிறந்தவிட்டுச் சமையலில் சாம்பார், தீயல், ரசம், ரசவாங்கி, தீபாவளி லேகியம் போன்ற சில பதார்த்தங்களைத் தவிர சமையலில் கொத்தமல்லிவிரையின்/தனியாவின் பங்கு குறைவு. புகுந்தவீட்டில் தனியா, தனியா இருக்காமல் எல்லாவற்றிலும் இருக்கும். பிட்லா/லை எல்லாம் செய்தது இல்லை. எனவே எனக்கு புவீ குறிப்பு தெரியவில்லை. இங்கு நான் சொல்லியிருக்கும் பிட்லா/லை கொத்தமல்லிவிரை சேர்க்காத பிவீ குறிப்பு. என் பாட்டியிடம் கற்றது.....

அம்மா கடலைப்பருப்பு எவ்வளவு போடணும்?

பாத்துக்கோ இம்புட்டு
ஒரு பெரிய ஸ்பூன்?
இதோ இந்த ஸ்பூன் அளவு?
ஒழுங்கா சொல்லும்மா!

அதெல்லாம் எனக்கு எங்கவிட்டி தெரியும்? இம்புட்டுதான் ஒரு விரக்கடைன்னு வைச்சுக்கோ.

ஹையோ அம்மாஆஆஆஆஆஆஆஅ நீ இப்பிடி சொன்னியானா நான் என்னத்த கத்துக்கறது? இரு. கடலைப்பருப்போடு வரேன். உன் கைல வைச்சுக் காணி.

அவர் விரக்கடை என்று சொல்லும் அளவில் பருப்பை வைத்து ஸ்பூனில் அளந்து எடுத்துக் கொண்டு எ...ழு......ஹா ஹா ஹா ஹா போயிந்தி!!!

புகுந்த வீட்டிற்கு வரும் முன் ஒரு மாதம் கூட இல்லாத நிலையில் பாட்டியிடம் ஒரு க்ராஷ் கோர்ஸ். எழுதியவை

கலாட்டாவில் எங்கு போச்சோ? அப்புறம் என்ன? பேக் டு ஸ்கொயர் 1. கண்ணளவு, இம்புட்டு, விரக்கடை! இப்ப என் பையன் என்னிடம் ''ம்மா ஒழுங்கா அளவு சொல்லு. சும்மா இம்புட்டு, அம்புட்டுன்னு. குக்கிங் இஸ் அல்ஸோ எ சயின்ஸ். அதுவும் எக்ஸ்பெரிமென்டல் சயின்ஸ்! டாக்குமென்ட் இட்.'' ஹூம் என்னத்த சொல்ல!!!!! ஹிஸ்டரி ரிப்பீட்ஸ். அம்மாக்குத் தப்பாத புள்ள!

இது சரிதான் என்றும் கூட எனக்குத் தோன்றும். ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் ஒரு ஸ்டாண்டர்ட் அளவு இருந்தால் (பேக்கிங்க்கிற்கு, சில இனிப்பு வகைகள், கார வகைகளுக்கு இருப்பது போல்) நாம் செய்யும் பதார்த்தம் பெரும்பாலும் ஒரே சுவையுடன் வரும். ஸ்டாண்டர்ட் ஆக. ஒரு நாள் உப்பு கூடி, புளி குறைந்து, போடும் பருப்புகளில் குறைந்து கூடி என்று வரும் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அமைவதற்கான வாய்ப்புகள் இல்லையோ? (இது புதன் கேள்வியாக ஆயிடுச்சோ?!) ஆனால் இதில் நன்மையும் உண்டு. இப்படி சில சமயம் செய்யும் போது புதுவித பதார்த்தங்கள் கிடைக்கும். நம் இஷ்டத்திற்கு ஒரு பெயர் வைத்துக் கொள்ளலாம். (கீதாக்காவின் திப்பிசம்!!!)



## பாகற்காய் பிட்லா/லை










இரண்டு பாகற்காய் : 3 டேபிள் ஸ்பூன்
துவரம் பருப்பு ; சிறிய எலுமிச்சை அளவு
புளி ; புளியை தண்ணீரில் ஊற போடனும்
வறுத்து அரைக்க ; 1/2 டேபிள் ஸ்பூன்
கடலைப்பருப்பு ; 1/2 டேபிள் ஸ்பூன்
உளுத்தம்பருப்பு ; 1/2 டீ ஸ்பூன் மிளகு ;
புளியங்கொட்டை அளவு பெருங்காயம் ; 1/2 கப்
தேங்காய் துருவல் ; 3 மிளகாய் வற்றல்

வாணலியில் சிறிது எண்ணை விட்டு மிளகாய் வற்றல், கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு, பெருங்காயம், மிளகு எல்லாவற்றையும் தனி தனியாக வறுத்துக்கோங்க. மிளகாய் வற்றல் அதிகம் கறுகாமல் வறுத்துக்கோங்க. தேங்காயையும் லைட்டா வறுக்கணும். படத்துல இருக்காப்ல. இதில் 3 டேபிள் ஸ்பூன் தனியா எடுத்து வைச்சுட்டு மீதி தேங்காயை மற்ற வறுத்தவற்றுடன் சேர்த்து அரைச்சுக்கோங்க. பருப்பை வேக வைச்சு எடுத்துக்கோங்க. தண்ணீரில் ஊற வைத்த புளியைக் கரைச்சு மூணு கப் புளித்தண்ணி இருக்காப்ல வைச்சுக்கோங்க. பாகற்காயை சிறிய துண்டுகளாக கட் செஞ்சு வைச்சுக்கோங்க.

வாணலியில் சிறிது எண்ணை விட்டு சிறிதாக கட் செய்த பாகற்காயைச் சேர்த்துகொஞ்சம் வதக்கிக்கோங்க. சிவக்க வதக்க வேண்டும் என்றில்லை.வதங்கியதும் கரைத்து வைத்த புளி தண்ணீரைச் சேர்த்து1/4 டீ ஸ்பூன் மஞ்சள் பொடி சேர்த்து மிதமான தீயில் கொதிக்க வைங்க. கொஞ்சம் கொதித்ததும் தேவையான உப்பு, வேண்டுமென்றால் சிறிய துண்டு வெல்லம் போட்டுக் கொதித்து பாகற்காய் வெந்ததும் அரைத்த விழுதைச் சேர்த்துக் கலந்துவிட்டு ஒரு கொதி வந்ததும் வேக வைத்த பருப்பையும் சேர்த்துக் கொதித்ததும் அடுப்பை ஆஃப் செய்து விடவும். வாணலியில் சிறிது எண்ணை விட்டு காய்ந்ததும் கடுகு போட்டு வெடிக்கும் போது கறிவேப்பிலை போட்டு பொரியும் சமயம் எடுத்து வைத்திருக்கும் 3 டேபிள் ஸ்பூன் தேங்காய் துருவலையும் சேர்த்துப் புரட்டி லைட்டாகச் சிவக்கும் சமயம் பிட்லா/லையில் சேர்த்துடுங்க பிட்லா/லை ரெடி.

**இப்போது பிட்லா/லைக்கு வருவோம். இது என் பாட்டி செய்யும் விதம். மற்றொரு பாட்டி (அதான் எனக்கும் சித்திப்பாட்டிகள் உண்டே!) கடலைப்பருப்பு இல்லாமல் செய்வார். ஆனா உளுத்தம்பருப்பு மிளகாய் வற்றலுடன் கொஞ்சம் மிளகும் சேர்த்து வறுத்துக் கொள்வார். எதுவாக இருந்தாலும் தேங்காய் கொஞ்சம் சிவக்க வறுப்பதுண்டு. அதிகம் சிவக்கக் கூடாது.**

இதில் சிலர் தனியா சேர்ப்பதுண்டு. ஒரு முறை பிட்லா என்று தனியா சேர்த்துச் செய்த போது என் மகன் "என்னம்மா இது கிட்டத்தட்ட அரைச்சுவிட்ட சாம்பார் மாதிரிதானே இருக்கு நீ சும்மா வெரைட்டி செய்யறேன்னு கதை விடற னு கேக்கவும் நான் எங்க வீட்டுல செய்யறதை செய்தேன். அதான் இங்க உள்ள செய்முறை. அவன் கமென்ட் "திஸ் மேக்ஸ் சென்ஸ்".

ஆத்தெண்டிக் என்று எதுவும் இல்லை என்றே தோன்றுகிறது. இது என் தனிப்பட்டக் கருத்து. நான் எல்லா விதங்களையும் சிறிது வித்தியாசம் இருந்தாலும், இருப்பதையும், தெரிந்து கொண்டு செய்வதுண்டு (இது மாமியார் குறிப்பு, பாட்டி, அம்மா, சித்தி, தோழி, வலையில் நம்ம நட்பூஸ் எழுதுவதைக் குறித்துக் கொள்வது என்று அவரவர் பெயர் வைத்து). இப்படித்தான் இது செய்ய வேண்டும் என்றெல்லாம் இல்லை.

(ஸ்பாஆஆ மைக் பிடிச்சு ரொம்ப நாள் ஆச்சா....பூஸாரே வரும் போது நல்ல ஹெல்தி ஸ்மூதி உங்க செக் கிட்ட கேட்டு செஞ்சு கொண்டு வாங்க!) பிட்லா/லைக்கு கொ.வி உண்டா கிடையாதான்னு ஜாலியா ஒரு லாக்டவுன் பட்டிமன்றம் கூகுள் மீட் ல போட்டுக்கோங்க!!!!!!!!!!! மீ விடு ஜூட்!!!!!!! கீதாக்கா நடுவர். வாதிப்பவர்கள் பானுக்கா அண்ட் நெல்லை! பின் குரல் தேம்ஸ் காரங்க 2 பேரும், வல்லிம்மா, கமலாக்கா, கோமதிக்கா.



**ஸ்மூதி கேட்டா....காபி போட்டு?!!! வாங்கி?!!!! வைத்துக் கொண்டு நாங்க வரதுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் பாருங்க!**

=========



# புது வீடு

## துரை செல்வராஜூ

வீட்டினுள் நுழையும் முன்பாகவே உள்ளிருந்து குரல் கேட்டது...

" இவ்வளவு நேரமா ஆச்சு ரெண்டு இட்டிலி வாங்குறதுக்கு?.... "

" சின்னையன் கையில இருந்ததை விட இப்ப கடையில கூட்டமா இருக்கு!... "

" அவன் மகன் இட்டிலிக் கடைய நல்லா நடத்துறான் போல... அதான் கூட்டம் வருது... கரும்பு கட்டோட இருந்தா எறும்பு செட்டோட வரும்..ன்னு சொல்லுவாங்க.... "

" அது போகட்டும்... பை என்னா பெருசா இருக்கு?... உங்களுக்கும் சேர்த்து வாங்கிக்கிட்டீங்களா?... அங்கேயே ரெண்டு தோசை தின்னுட்டு வந்திருக்கலாமில்லே... "

" ராத்திரியில எதுக்குத் தோசை?.. நெஞ்சைக் கரிச்சிக்கிட்டு இருக்கும்... "

" சரி... அந்தப் பொட்டலத்தைப் பிரிங்க... இதென்ன ரெண்டு இட்லிக்கு நாலு சட்டினியா?... "

"உனக்கு நாலு எனக்கு நாலு வாங்கினேன்!... ரெண்டு இட்டிலி எந்த மூலைக்கு?... "



"அதுவும் சரிதான்... தண்ணிய எடுத்து பக்கத்துல வெச்சிக்குங்க...

சற்று நேரத்துக்கு அமைதி...

" என்ன இது சட்டினியில இருந்து நூல் வருது?... "

" பொட்டலம் கட்டியிருந்த நூலைப் பிரிச்சு நான் தான் கீழ போட்டேன்... அது எப்படி இலையில விழுந்தது?... சரி.. சரி... அத அப்படி ஒரு ஓரமா போடு!... "

" இந்த பல்பு வேற மங்கலா எரியுது... வேற புதுசு வாங்கி மாட்டணும்

" உங்களோட கண்ணாடி கூட ரொம்பப் பழசாப் போச்சு... என்னைக்குக் கையில காசு வர்றது?... என்னைக்கு கண்ணாடி மாத்துறது?..

" நீயும் தான் கண்ணாடி போடாமயே காலத்தை ஓட்டிட்டே!.. எத்தனை தடவை நானும் கூப்பிட்டேன் ஆஸ்பத்திரிக்கு வா...ன்னு!.... "

" ஏன்?... காசுக்குக் காசும் கண்ணுக்குக் கண்ணும் கோளாறு ஆவுறதுக்கா?.... "

" உனக்கு இன்னொரு இட்டிலி வைக்கவா?.... "

"போதும் போதும்!... நாலு இட்டிலியே ஜாஸ்தி... அந்தக் காலத்துல தேங்கா மூடி கனத்துக்கு இட்டிலி இருக்கும்.. எட்டு இட்டிலிக்கு மேல சாப்பிடுவீங்க... இப்பத்தான் ஓட்டாஞ் சல்லி மாதிரி ஆக்கிட்டானுங்களே!..."

" இட்டிலியும் அயிர மீனு கொழம்பு..ன்னா இன்னும் ரெண்டு சேர்த்து சாப்புடுவீங்க... இப்போ அதெல்லாம் மாறிப் போச்சு... பச்சத் தண்ணியக் குடிச்சாலே வயித்துக்கு ஒத்துக்கிட மாட்டேங்குது... "

" அக்கம் பக்கத்துல நல்ல கொழம்பு வெச்சா நாலு வீட்டுக்குக் கொடுத்துட்டு ஆளும் பேருமா சாப்பிட்ட காலம் எல்லாம் மலையேறிப் போச்சு... இப்போ மக்க மனுசங்க எல்லாம் அடுத்து என்னா நடக்குது..ன்னு தெரியாமஅடைக்கோழி மாதிரி... ஆகிட்டாங்க... "

" மக்க மனுசங்க..ன்னு பிறத்தியார எதுக்கு குறை சொல்லணும்.. பெத்தெடுத்த புள்ளங்களே எத்தி உட்டுட்டுப் போயிடுதுங்க!... "

" சரி.. சரி... ரொம்பப் பேசாம இந்த மாத்திரயப் போட்டுக்கிட்டு தண்ணியக் குடி... எனக்குக் கண்ணச் சுத்துது... "

" அப்படியே பாய விரிச்சுப் போட்டுப் படுங்க... "

" நல்லாருக்கு.. சாப்பிட்ட எடத்தை ஒருதரம் கூட்டித் தள்ளாம... எப்பிடி பாயப் போடறது?... "

சரட்... சரட்.. - என்ற ஒலி... அடுத்த சில நிமிடங்களில் கோரைப் பாய் - 'படார்' என்று உதறப்படும் சத்தம்...

" கடவுளே... ஈஸ்வரா... நல்ல தூக்கத்தைக் கொடுங்க சாமியளா!... ஸ்ஸ்ஸ்.... அப்பா... இந்த இடுப்பும் முழங்கால் மூட்டும் வலிக்கிற வலி... சொல்ல முடியலை.. போ!... "

நெஞ்சின் ஆழத்திலிருந்து ஆற்றாமையும் வேதனையும் வெளிப்பட்டன..

" அதுவும் ஆச்சு... அறுபத்தேழுக்கு மேல... காலம் பூரா கஷ்டப்பட்ட உடம்பு.... இந்த மட்டுக்கு இருக்குறதே புண்ணியம்.... "

"ஞாபகம் இருக்கா அஞ்சலை... மாலையுங் கழுத்துமா நீ இந்த வீட்டுக்கு வந்தப்போ உனக்கு பதினெட்டு கூட முடியலை... "

" ஞாபகம் இல்லாமயா இருக்கும்?... நீங்க மட்டும் என்ன?.. இருவதைக் கூட தாண்டலை!.. "

"இதான் வாழ்க்கை..ன்னு புரிஞ்சுக்குறதுக்குள்ள மூணு வருசம் ஓடிப் போச்சு.. அதுக்குள்ள பெரியவனும் பொறந்துட்டான்!... "

பொரட்டாசி கடசீயில பொறந்ததனால கோயிந்தராசு...ன்னு பேரு வெச்சோம்... ஆனாலும் அந்த அடைமழையில ரொம்பவுந்தான் கஷ்டப்பட்டுட்டான்... "

" என்னமோ வாயுன்னு சொன்னாங்க... ராத்திரி பூரா வயித்து வலியால அழுதுக்கிட்டே இருப்பான்... "

"ஒருத்தரு மாத்தி ஒருத்தர் மார்... லயும் தோள்.. லயும் போட்டு தாலாட்டிக்கிட்டு இருப்போம்.... மருந்து அரச்சி மருந்து அரச்சி.. எங்கம்மாவுக்கு கையே கடுத்துப் போய்டும்... "

" பத்து நாள் அடைமழையில வீடு வேற ஒருபக்கம் சரிஞ்சு போச்சு... என்னமோ போங்க... அதெல்லாம் நெனப்பெல்லாம் நெஞ்சுக் குழிக்கு வந்துட்டா அதுக்கு அப்புறம் கண்ணு மூடித் தூங்க முடியாது... "

"அப்படியெல்லாம் கஷ்டப்பட்டுபடிக்க வச்சு ஆளாக்கி வேலையும் வாங்கிக் கொடுத்துட்டு... "

மீண்டும் சில நொடிகள் அமைதியாக நகர்ந்தன...

அடிப் போடி பைத்தியக்காரி!... நாலு தென்னம் பிள்ளைய நட்டு வைச்சிருந்தாலாவது லாபக் கணக்கைப் பார்த்துருக்கலாம்...

" நாம கொடுத்து வெச்சது அவ்வளவு தான்!... "

மெலிந்த விரல்களால் அருகில் படுத்திருந்த ஆசைக்

கணவனின் முகத்தை வருடியபடி தலையைக் கோதி விட்டாள் அஞ்சலை...

" என்னாது.. அழுவுறீங்களா?.... "

மூக்கைச் சிந்தியபடி தொடர்ந்தார் பெரியவர்....

" வேற என்ன பண்ணச் சொல்றே!... இதுக்குத் தான் நான் பழசை எல்லாம் நினைக்கிறதே இல்லை... "

" நீங்க தானே பழைய கதையைக் கிளறி விட்டீங்க!... ஆயிரம் இருந்தாலும் அவன் நம்ம புள்ளை இல்லையா... "

" கோவத்தை எல்லாம் மூட்டை கட்டி வைச்சுட்டு நம்ம மருமக.. நம்ம பேத்தி.. ந்னு எடுத்துக்கணும்.. கருகருன்னு சுருட்டை முடி.... மூக்கும் முழியுமா செக்கச் செவேல்..ன்னு அன்னக்கிளி மாதிரி இருக்காளாம் உங்கபேத்தி... "

" உனக்கு யாரு... சொன்னது?... "

" நமக்கும் அவனுக்கும் தான் புடிக்கலை... ஆனா அவன் இந்த மூணு நாலு வருசமா உடம்பொறந்தாளுக்கு தீவாளிக்கு சீரு.. பொங்கலுக்கு சீரு..ன்னு செஞ்சிக்கிட்டு இருக்கான்.. தெரியுமா!... "

" பவளம் சொன்னாளா!... "

" ஆமாம்!... "

" எங்கிட்ட அவ சொல்லவேயில்லை... "

" ம்... நல்லாருக்கு கதை... அவம் பேரைக் கேட்டாலே நீங்க சாமி வந்த மாதிரி ஆடுவீங்க!... அது தெரிஞ்சு தான் நிதானமா அப்பாக்கிட்ட சொல்லும்மா..ன்னு... பவளம் சொல்லிட்டுப் போனா... "

கொஞ்ச நேரத்துக்கு அமைதி...

" கூரையா இருந்த வீட்டை ஓட்டு வீடா எடுத்துக் கட்டி கரண்டு லைட்டு எல்லாம் போட்டோம்... புள்ளைங்களுக்கு அவ்வளவு சந்தோசம்...மூணு புள்ளைங்களும் ஓடி ஆடுன இந்த வீட்டுல பேரப் புள்ளைங்களுக்கு கொடுத்து வைக்கலே... அதுங்களோட ஆட்டம் பாட்டத்தைப்

பார்க்க மாட்டோமா...ன்னு இருக்கு... "

நடுங்கிய குரலில் ஏக்கம் மேலிட்டு வழிந்தது..

" பெரியவன் தான் இந்தப் பக்கம் வர்றதே இல்லை... பவளமும் சின்னவனும் ஆடிக்கொரு தரம்.. அமாவாசைக்கு ஒருதரம்... அப்படியே வந்தாலும் ஒரு மணி நேரம்.. இல்லேன்னா ரெண்டு மணி நேரம்.. அவ்வளவு தான் நாம கொடுத்து வைச்சது... "

" என்னைக்காவது ஒரு நாள் பெரியவன் நிச்சயம் வருவான்... எதையாவது சொல்லி அவனை விரட்டி விட்டுடாதீங்க... "

" இது மட்டுந்தான் ஆசையா... வேறெதுவும் இருக்குதா?.."

"சொல்லவா?.. திகைச்சுப் போய்ட மாட்டீங்களே!.."

"சொல்லு!.."

"ஒருத்தரு இல்லாம ஒருத்தர் தவிக்கப்படாது!.. சாமி நின்னு வரங் கொடுக்கணும்!... "

" புள்ளைங்க தவிச்சுப் போய்டுவாங்களேடி!..."

" என்னமோ.. மனசு தான் கிடந்து அப்படியும் இப்படியுமா அல்லாடுது..."

" சரி.. சரி.. கொஞ்ச நேரம் கண்ண மூடித் தூங்கு... நடுச் சாமத்துக்கு மேல ஆச்சு... "

எங்கோ தூரத்தில் முதல் கோழி கூவும் சத்தம் கேட்டது...

" இனிமே எங்கே தூங்குறது... பொழுது தான் விடியப்போகுதே... எந்திருச்சி கொஞ்சம் வற கசாயம் போட்டுத் தர்றேன்.. குடிக்கிறீங்களா?.. "

" அது எதுக்கு!... வெறும் வயத்துல வற கசாயம் வேணாம்... பக்கத்துல காசிச் செம்புல தண்ணி இருக்கு.. அத எடு.. கொஞ்சம் குடிச்சிக்கறேன்...

" நீங்க... எங்கே கிளம்புறீங்க?... இந்தப் பனியில!.. "

அப்படியே காலார நடந்துட்டு வர்றேன்!..."

" சரி.. தலையில மப்ளரை சுத்திக்கிட்டுப் போங்க!... "

வெளி நடையில் செருப்புகளை மாட்டிக் கொண்டு நடக்கும் சத்தம் கேட்டது...

************

பொழுது புலர்ந்து கொண்டிருந்த வேளையில் - நடைப் பயிற்சி செய்து கொண்டிருந்த கணேச மூர்த்தியை நெருங்கிய அவர் -

" சார்.. வணக்கம்... நான் உங்க பக்கத்து வீடு... பாலகிருஷ்ணன்... நேத்து கூட கிரகப் பிரவேசத்துக்கு வந்திருந்தேன்... "

" வணக்கம் பாலகிருஷ்ணன் சார்... நேத்து உங்களோட ரொம்ப நேரம் பேச முடியலை!... "

" எப்படி சார் இருக்கு புது வீடு?.... "

" எங்கே சார்... ராத்திரியெல்லாம் தூக்கமே இல்லை... "

" புது இடம் தானே... அப்படித்தான் இருக்கும்!... "

" அதெல்லாம் இல்லை பாலன்... ராத்திரி பூரா யாரோ வயசானவங்க ரெண்டு பேர் பேசிக்கிற மாதிரி... எனக்குத்தான் பிரமை..ன்னு நினைச்சா மகளும் அப்படியே சொல்றா.. வீட்டுலயும் அப்படியே சொல்றாங்க!... "

" சரிதான்... உங்களுக்கு முன்னால இந்த வீட்டுக்கு வந்தவங்களும் இதையே சொல்லிட்டு வீட்டைக் காலி பண்ணிட்டுப் போய்ட்டாங்க... இப்போ நீங்க இரண்டாவது!.. ".

" ஆமா... இது என்ன மாதிரியான கதை?... "

" கதை இல்லை இங்க... பதினைஞ்சு வருசத்துக்கு முன்னால உங்க மனையில பழைய காலத்து ஓட்டு வீடு.. அதுல வயசான ஐயாவும் அம்மாவும் இருந்து கஷ்டப்பட்டு அநாதரவா போய்ச் சேர்ந்துட்டாங்க... எப்படியோ வாரிசுகளைக் கண்டு புடிச்சி கிரயம் பண்ணி அந்த இடத்துல தான் இந்த வீட்டைக் கட்டி வித்து இருக்கானுங்க.. அந்த ஐயாவும் அம்மாவும் தான் ஆவியா வந்துட்டுப் போறதா பேச்சு.."

" பாருங்க... இதெல்லாம் தெரியாம வீடு நல்லா இருக்குதே... -ன்னு வாங்கிட்டோம்!... "

" இப்படித்தான் ரொம்பப் பேர் விவரம் தெரியாம வாங்கிட்டுக் கஷ்டப்படுறாங்க.. பயமா இருக்குது... பிடிக்கலை.. ன்னா சொல்லுங்க... கை மாத்திடுவோம்... பத்திரச் செலவு போனா போகட்டும்... நமக்கு நிம்மதி தான் முக்கியம்.. என்ன நான் சொல்றது!... "

" நான் ஒரு யோசனை செஞ்சிருக்கேன் பாலன்!... "

" என்னது?... "

" நாளைக்கே திருவையாற்றுக்குப் போய் அவங்க ரெண்டு பேருக்கும் திதி கொடுத்து மோட்ச தீபம் ஏத்தி வைக்கிறது...ன்னு.... "

" அப்படி வைச்சா!... "

" முகந் தெரியாத அவங்களை நம்ம வீட்டுப் பெரியவங்களா ஏத்துக்கிட்டு... திதி, தீர்த்தம், அன்ன தானம்... ன்னு கொடுத்தா அவங்களோட ஆத்மா சாந்தியடைஞ்சிடும்!... "

" அதுக்கு மேல அவங்க அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்குனதா சொல்றீங்க!... பிறத்தியார் மேல பிரியம் காட்டுறது தான் நமக்கு கை வந்த கலையாச்சே!... ஆளுங்க மேல காட்டுற பிரியத்தை ஆவிகள் மேல காட்டுவோம்!... அதுக்கு மேல என்ன பிரச்னை!... "

- கணேச மூர்த்தி சிரித்தார்...

'இந்த ஆளும் பயந்து ஓடி விடுவான்!... அடாவடியாய் அடித்துப் பேசி குறைந்த விலைக்கு வீட்டை வாங்கி விடலாம்!... ' - என்று நினைத்திருந்த பானா கீனாவின் மனக்கோட்டை காற்றில் கரைந்து கொண்டிருந்தது...

---



# கேள்விகளும், பதில்களும்

**நெல்லைத் தமிழன்:**

**1. 'யார்கிட்டதான் குறை இல்லை' என்று பொறுத்துப்போகும் குணம் ஏன் பொதுவா நமக்கு வருவதில்லை?**

$ பார்த்தீங்களா, நமக்கு என்று உலகத்தையே சேர்த்துக்கொள்பவர் குறை என்று வரும்போது தனிக்கிறீர்களே?

# தன் குற்றம் காணும் தகைமை மிக அரிய விஷயம். ஏன் நம்மிடம் இல்லை என்பதை நம்மைத் தவிர வேறு யார் சொல்ல முடியும்?
பெரும்பாலும் மக்கள் தாம் தவறேதும் செய்வதில்லை என்று (தவறாக) நம்புவதுதான் அசல் காரணம்.

&

<u>குறள் 190</u>:

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

**மு.வரதராசன் விளக்கம்:**
**அயலாருடைய குற்றத்தைக் காண்பது போல் தம் குற்றத்தையும் காண வல்லவரானால், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?.**

**2. ஒருவர் இறந்த உடன் நமக்கு துக்கம் வருவதற்குக் காரணம் என்ன?**

$ இறப்பு என்றில்லை கல்யாணம் ஆகிப் போகும் பெண்ணும் பெற்றோரும் துக்கப் படுவதைப் பார்க்கவில்லையா. இனிக் காண முடியாது என்பதால் இருக்கலாம்.

# ஒருவர் இறந்தவுடன் அவர் தொடர்பாக நாம் செய்யத் தவறியவை, தவறாகச் செய்தவை, நாம் இனி இழக்கப் போகும் சந்தோஷங்கள் திருப்திகள் ஆகியவை நமக்கு துயர் தருவது இயல்பு.

& அஞ்ஞானம்தான் காரணம் என்கிறார்கள் ஆன்மீக குரு எல்லோரும்.

**3. மறைந்துவிட்டார் என்பதனாலேயே ஒருவர் செய்த தவறுகளும் மறைந்துவிடுமா? சுட்டிக் காட்டுவது தவறா?**

$ தண்டிக்க வழியில்லை என்பதால் மக்கள் பணத்தில் செருப்பு வாங்கினார், பருப்பு சாப்பிட்டார் என்பது போன்ற விஷயங்களுடன் அன்னாரை மறுக்கலாம்.

# மறைந்து விட்டவரது குறைபாடுகள்மறையாதுதான் எனினும் அவற்றைச் சொல்லிக் காட்டுவது பயனற்றது. அநாகரிகமானது.

4. கோவிலுக்கு நாம் போவதன் முக்கியக் காரணம் என்ன?

$ கோவில் இயற்கை சீற்றங்களால் பெரும்பாலும் அழிவதில்லை ஆகையால் அடைக்கலம் அடைய சிறந்த இடம். நாளும் நடந்து பழகி விட்டோமானால் எவ்வளவு இருட்டு, காற்று மழை என்றாலும் சென்றடைந்து விடலாம்.

# அமைதியான சூழல், அற்ப எண்ணங்களைத் தற்காலிகமாகவேனும் தவிர்த்த அன்பர் கூட்டம், சில இடங்களில் பிரசாதத்தின் சுவை.

& ரொம்ப சிம்பிள் - 'கோவில் நம்மிடம் வராது' என்பதால்தான்!

5. தம்பி என்பவன் அண்ணனுக்கு எப்போது வரை கட்டுப்பட்டவன்?

$ அன்பில் குறை இல்லாதவரை.

# தம்பி தன் காலில் சுயமாக நிற்கும் நிலை வரும்வரை அண்ணனுக்குக் கட்டுப்பட்டவன்.

6. கோவிலில் மூலஸ்தானத்தின் அருகில் இருந்தால் நமக்கு அதிக பலன், தூரவே நின்று கொண்டு ப்ரார்த்தித்தால் பலன் இல்லை என்பதிலெல்லாம் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? ஏன் எல்லோரும் மூர்த்தி அருகிலேயே போக விரைகிறார்கள்?

$ கண் பார்வை குறைந்தாலும் காணும்படி.

# நம்பிக்கை இல்லை தான். கிட்டச் சென்றால் சரியாகப் பார்க்கலாம்.

& அருகில் இருந்தால்தான் அதிக பலன் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

7. நல்லா எழுதக்கூடியவங்கள்லாம் பிளாக்கைத் தொடராமல், முகநூல் லைக்கிங்ஸ்ல ஆசை வைத்து பிளாக் எழுதுவதை விட்டுடறாங்களே. இதன் காரணம் என்ன?

$ Entry posting both are easy
Likes and comments go beyond linguistic preferences.

# இரண்டு காரணங்கள் இருக்கக் கூடும்.
- பிளாகை விட முகநூல் வாசகர் அதிகம்.
- கருத்துப் பதிவோடு விரும்பியவர் எண்ணிக்கையும் காணக் கிடைக்கும் சந்தோஷம்.

வல்லிசிம்ஹன் :

கேள்வி இல்லாத புதனா.?
ஒருவருக்கும் சந்தேகமே இல்லையா.?
தொற்று வந்ததில் இவ்வளவு பாதிப்பா.?

ஒருவருடன் ஒருவர் உரையாடுவதில் தயக்கம் வருமா?

இது பல குழுமங்களில் பார்க்கிறேன்.
அவரவர் தன்னுள் உண்டான பயத்தில் ,வேதனையில் ஒதுங்குகிறார்களா?

# கேள்வி கேட்பது எல்லாருக்கும் இயல்பல்ல. இங்கும் ஒரு சிலரே கேட்கிறார்கள். மனதைக் குடையும் விஷயம் இருந்தால் கேள்வி எழுகிறது. ஆனால் பலரும் " என்ன சொல்றாங்க பார்க்கலாம் " டைப் கேள்விதான் கேட்கிறார்கள்.

& சந்தேகங்கள் + ஆர்வம் இருக்கும். கேட்க நினைத்து பின் மறந்துவிடுபவர்கள்தான் அதிகம்!
தொற்று பாதிப்பு, பயம், வேதனை எல்லாம் அதிகம் போனால் ஐந்து சதவிகிதம் இருக்கலாம்.

**கீதா சாம்பசிவம் :**

**1. ஆன்மிகம் வேறே பக்தி வேறே என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். உங்கள் நாட்டம் ஆன்மிகத்திலா, பக்தியிலா?**

# நிச்சயம் பக்தி இல்லை. ஆன்மீகம் பெரிய வார்த்தை. அறிந்து கொள்ள ஆர்வம் உண்டு. அதற்கு மேல் ஒன்றும் இல்லை.

& ஆன்மிகம் தன்னை அறிவது, பக்தி கடவுளை அறிவது என்று நினைத்தால், என் நாட்டம் எனக்குள்ளே உள்ள கடவுளை அறிவது.

**2. உங்கள் ஆன்மிக குரு என யாரும் இருக்கிறார்களா?**

# சிந்தனையைத் தூண்டும் விஷயங்களை எடுத்துரைத்த பலர் இருக்கிறார்கள். முக்கியமாக ஜேகே பரமஹம்சர், ஆதி சங்கரர். சமீப காலத்தில் ஜக்கி வாசுதேவ். அவர் பேச்சு குறைகாண முடியாத ஈர்ப்புடன் கூடியது.

& ஓரளவுக்கு என் ஆன்மீக குரு என்று நான் நினைப்பது நொச்சூர் வெங்கட்ராமன் அவர்களை.



3. நேற்று/இல்லை, இன்று இளையராஜா பிறந்த நாளாம்! முகநூலில் நிரம்பி வழிந்தது. இதை எல்லாம் படிக்கையில் மக்கள் இவ்வளவு பித்தாக இருப்பதைப் பார்த்து ஆச்சரியமாக இருக்கு! இது சரியா? தனியொருவனை வழிபடுவது சரியா?

# வழிபடவில்லை, கொண்டாடுகிறார்கள். அவர்களுக்கு ப் பிடிக்கிறது. அதில் நமக்கு என்ன ஆட்சேபம் ?

& நேற்று இல்லை, இன்று இல்லை எப்பவும் நான் ராஜா என்று அவரே சொல்லிவிட்டாரே! தனிமனித துதி தேவை இல்லை என்பதுதான் என் கருத்தும்.

4. இந்தத் தனிமனித வழிபாடு மனிதனுக்கு எப்போது வந்திருக்கும்? யாரேனும் ஒருவரைத் தன் தலைவனாக ஏற்றுக்கொண்டே தீர வேண்டும் என்பது மனிதனுக்குக் கட்டாயமா?

# தனிமனித வழிபாடு அநாதிகாலமாக இருந்து வருகிறது. இது நமது கல்சர் என்று கூடச் சொல்லலாம்.
தலைவனாக இல்லை எனினும் வழிகாட்டியாக ஏற்பவர்கள் பலர்.

**5. பஞ்சாங்கங்கள் இப்போது கொரோனா பற்றியும், வெட்டுக்கிளி தாக்குதல்கள் பற்றியும் முன் கூட்டியே கணித்திருப்பதாக அனைவரும் எடுத்துப் போடுகின்றனர். இது ஏன் நமக்கு முன்னரே தெரியவில்லை? தெரிந்தும் ஏன் சும்மா இருந்தோம்/இருக்கிறோம்?**

# படித்தபோது நம்மைக் கவரவில்லை. அது பலிக்கும் போதுதான் அந்தஸ்து வருகிறது.

& வருடா வருடம் என்னென்னவோ பலன்கள் சொல்கிறார்கள். எப்பவாவது சில விஷயங்கள் மட்டும் அதுபோல நடந்துவிடுகின்றன. அவ்வளவுதான்.

**6.கொரோனா தாக்குதலினால் ஏற்பட்ட ஊரடங்கினால் வீடுகளில் சண்டை, சச்சரவு அதிகம் ஆனதாகச் சிலரும், இல்லை எனச் சிலரும் சொல்கின்றனர். ஆனால் இதனால் பாதிக்கப்பட்டது ஆண்கள் அதிகமா, பெண்கள் அதிகமா?**

# பாதிக்கப் படுவது வருத்தத்துற்குரியது. ஆணானால் பரவாயில்லை என்று சொல்ல முடியுமா ?
ஆணா / பெண்ணா யார் அதிகம் பாதிக்கப் பட்டார் என்று எதை வைத்துச் சொல்வது?. பொதுவாக அடுத்தவர் இருப்பதை சகித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏன் ஏற்படுகிறது ? இருப்பவர் குறைபாடா சகிக்க வேண்டி உணர்பவர் குணதோஷமா ?

7. நோய்த்தொற்று அதிகமாக இருக்கும்போதே ஊரடங்கைத் தளர்த்தியதும், பேருந்துகள், ஆட்டோக்கள் ஓடவிட்டதும் சரியா?

# ஓரளவுக்கு மேல் எல்லாவற்றையும் கட்டிப் போட முடியாது. வேறு பெரிய பிரச்சனைகள் எழக்கூடும்.

8. உண்மையான புள்ளி விபரங்கள் சொல்லுவதில்லை எனப் பலரும் சொல்லுகின்றார்கள். இதில் உண்மை இருக்குமா?

# புள்ளி விவரங்கள் என்றாலே உண்மையல்ல; ஊகம் என்று சொல்லி விடலாம்.

& 'There are three kinds of lies: lies, damned lies, and statistics'? This quotation is often attributed to Benjamin Disraeli, the 19th century British Prime Minister.

(பொய்கள் மூன்று வகைப்படும் - அவை = பொய்கள், பச்சைப்பொய்கள் மற்றும் புள்ளிவிவரங்கள்!)

9.சுகாதாரப் பணியாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்கிறார்கள். ஆனால் தொலைக்காட்சியில் காட்டுபவர்கள் அனைவரும் உடலை முழுதும் மூடிக் காணப்படுகிறார்கள். இதில் எது உண்மையாக இருக்கும்?

# சரிவரக் கொடுக்காததைக் காட்சிப் படுத்தவில்லை என்பது உண்மையாக இருக்கும்.

10. மருத்துவர்கள் கொரோனா நோயாளிகளைக் கவனிப்பதில்லை என்று சிலரும் கவனிப்பதாகச் சிலரும் சொல்கின்றனர்! உண்மை எது? மருத்துவர்களும் மனிதர்கள் தாமே! அவர்களுக்கும் அலுப்பு வந்திருக்குமோ?

# அலட்சியம் மருத்துவர்களிடையேயும் இருக்கும்.

**11. பரிசோதனைக்கு வரப் பிடிவாதம் பிடிப்பவர்கள் பயத்தினால் அப்படிச் செய்கிறார்களா? மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் தப்பி ஓடுகிறார்களே ஏன்? மருத்துவம் அவ்வளவு கடினமானதாக இருக்கிறதா?**

# மருத்துவத்தில் கடினம் ஏதுமில்லை. தனிமைப் படுத்தப் படுவதை பலரும் விரும்புவதில்லை.



# " சின்னப் பாட்டி எனும் தர்மாத்மா"

A 'thumbnail sketch' by K G Y ராமன்.

எனக்கு விபரம் தெரிந்து சின்னப் பாட்டியைப் பார்த்த போது அவருக்கு எண்பது வயதுக்கு மேலே இருந்திருக்கும்.

சற்றே கூன் விழுந்த முதுகு. தங்கக் கலர். ஐந்தரை அடி உயரம். மழித்து பத்து நாள் ஆன தலையை வெள்ளை என்று சொல்ல முடியாத ஒரு இரண்டுங் கெட்ட நிறத்தில் புடவைத் தலைப்பு முட்டாக்காக மூடி இருக்கும். நெற்றியில் நாமக் கீற்று அவரது வைணவத்தை அறிவிக்கும்.



சின்னப் பாட்டியின் பெயர் சௌந்தரம் என்பது சில சித்தப்பா அத்தைகள் "சௌந்தராப் பாட்டி" என்று குறிப்பதிலிருந்து தெரிய வந்தது.

ஊர்ப் பெரிய மனிதரின் பெரிய வீட்டுக்கு "கீழண்டை" அவரது பெரிய மாட்டுக் கொட்டகை. அதை அடுத்து ஒரு

ஒற்றைத் திண்ணையுடன் இருந்த சின்ன ஓட்டு வீடு. நாலரை அடி உயரமேயான நிலைப் படியை ஒற்றை மரக்கதவு அடைத்திருக்கும். பெரிய நாதாங்கி கொக்கியில் பூட்டுத் தொங்கி நான் பார்த்ததில்லை.

ஊரே சின்னப் பாட்டி என்றழைக்கும் இந்தப் பெண்மணி யாருக்கு "சின்னப் பாட்டி" என்பது ஒருவாறு ஊகிக்க முடிந்தது எப்படி என்றால் அவருக்கு தினசரி ஒரு சிறு செம்பில் இரண்டாழாக்குப் பசும்பால் பெரிய வீட்டிலிருந்து போகும். மற்றபடி பாட்டி தன் சகல தேவைகளையும் தானே கவனித்துக் கொண்டாள்.

அந்தக் காலத்தில் கழிப்பறை வெட்ட வெளியாக மட்டுமே இருந்தது. என்றாலும் அதிகாலை ஸ்நானம் செய்ய "காவேரிக்கு" (அசல் பெயர் அதுவல்ல. தஞ்சை மாவட்டத்தில் எல்லா ஆறுகளும் காவேரி என்றே குறிக்கப் படும்.) கூன் நடை போட்டுப் போய் ஈரப்புடவையை நன்கு இழுத்துப் போர்த்திக் கொண்டு முண முண வென்று பிரபந்தமோ ஸ்தோத்திரமோ நாம ஜபமோ சொன்னபடி நடப்பதைத் தவிர மற்றபடி வெளியில் அதிகம் பார்த்ததில்லை.

ஊரில் யாருடனும் பத்து வார்த்தை பேசிப் பார்த்ததில்லை.

மிக இளம் பிராயத்தில் "வீணாகிப் போன சௌந்தரம் அம்மாள் ஊர்ப் பெரிய மனிதர் குடும்பத்துக்கு நெடுந்தூரத்து உறவாக இருக்கும். அந்தக் காலத்து வெண்ணிற ஆடை விதவைகளுக்கே உரித்தான வைராக்கியத்துடன் சகல சந்தோஷங்களையும் ஒதுக்கி வைத்து வாழ்ந்த பாட்டி தியாகியாகவோ துறவியாகவோ இருக்கலாம். அதெப்படி அவர் அட் லீஸ்ட் எனக்கு தர்மாத்மாவாக காணப் பட்டார் ?

அங்கே இருக்கிறது சுவாரசியம்..

ஊரில் எல்லாக் குழந்தைகளுக்கும் காலைவேளையில் கிடைத்த உத்தரவு: "போய் சின்னப் பாட்டி வீட்டுப் பிறையிலிருந்து உமிக்கரி எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போய் பல் தேச்சுட்டு வா!"

ஆம். இந்த எளிய ஏழை விதவை ஊர்ப்பிள்ளைகளுக்காக உப்பிட்ட உமிக்கரி தயார் செய்து பிறையில் (பிறை என்றால் திண்ணைச் சுவற்றில் உள்ள சிறு மாடம்) குவித்து வைத்திருப்பார். அது ஊர்ப்பிள்ளைகளின் பொதுச் சொத்து.

“யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"

என்ற வரிசையில் "யாவர்க்கும் ஆனதோ பாலர்க்கோர் உமிக்கரி" என நான் அடிக்கடி சொல்லிக் கொள்வேன்.

ஒரு சிறுநகை செய்தறியாத சௌந்தரம் அம்மாளை உமிக்கரி தயாரித்து ஊருக்கு வழங்கச் செய்தது எது ?

ஞாலத்தின் மாணப்பெரிதாக நான் கருதும் இந்தக் கொடைமனம் சி.பா வை வைகுண்டம் சேர்த்திருக்கும் என்று திடமாக நம்புகிறேன்.



எழுதுபொருள் பற்றி ....

இந்த வாரம் :

கற்பலகை என்பது சிலேட்டு க்கு சூட்டப்பட்ட தமிழ்ப்பெயர் இருவழிகளில் பொருத்தம்

1. கரு நிற கல் பலகை

2. கற்க உபயோகப் படும் பலகை.

கற்பலகை தாண்டி அடுத்து நோட் & பென்சில்

முதலில் எழுதத்துவங்கியது இரட்டை வரி நோட்டில்.


சாதாரண வரி அச்சடித்த நோட்டுக்கும் இதற்கும் கொஞ்சம் மாறுதல். வரிக்கு வரி இடைவெளி குறைக்கப்பட்டு (பெட்ரோலிய பொருள்கள் மீதான வரி போல) இரண்டு வரிக்கு ஒரு தடவை வரி நீக்கப் பட்டிருக்கும்.

******


நான் படித்த காலத்தில்,
சிலேட்டின் ஒரு பக்கம் அப்படியே விட்டுவிட்டு,
மறு பக்கத்தில் ஆணியால் கீறி இரட்டை வரிகள் போட்டுக் கொடுப்பார்கள் - வீட்டில் உள்ள அண்ணன் / அக்கா.

வீட்டுப்பாடம் எழுதும்போது plain பக்கத்தில் கணக்கு, இரட்டை வரிகளுக்கு இடையே செய்யுள் போல எழுதிச் செல்லவேண்டும்.

## மின்நிலா 004




====================



(ஓவியர் கிப்பாசோ வரைந்தது. )

# டீனேஜ் ஆசை

:: (ஸ்ரீராம்) ::

எனது டீனேஜ் பருவத்தில் ரகம் ரகமான நண்பர்கள் எனக்கு இருந்தனர்.

'எல்லோருக்கும் அப்படித்தான்...' என்று ஏதோ குரல் கேட்கிறது! யாரது நெல்லையா?

ஒரு நண்பன் அவனது வேலைக்கு அப்ளிகேஷன் டைப் செய்ய என்னை உபயோகித்துக் கொள்வான். நான் டைப்ரைட்டிங் கிளாஸ் சென்று பாஸ் செய்த காரணத்தால் அவன் வீட்டுக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்படுவேன்.

அவன் அப்பா வீட்டில் ஒரு சிறு டைப்ரைட்டர் வைத்திருந்தார். அதில் அவனுக்கு டைப் அடித்துக் கொடுப்பேன். அழகான Facit டைப்ரைட்டர் அது.

என் அப்பாவின் நண்பரும் ஒரு சிறு டைப்ரைட்டர் வைத்திருந்தார். அதில் டைப் அடித்தால் எழுத்துகளை சேர்த்து எழுதுவது போல (Cursive writing) டைப் ஆகும். அழகாக இருக்கும்.



நான் பயின்று கொண்டிருந்த டைப்ரைட்டிங் கிளாஸில் திடீரென என் வகுப்புத் தோழன் ஒருவன் வந்து சேர்ந்தான். அவனுக்கு இதெல்லாம் தேவையே இல்லையே... ஏன் வந்து சேர்கிறான் என்று எனக்கு ஐயம். அவன் தந்தை வட்டாரப் போக்குவரத்து அதிகாரி. செம துட்டுப் பார்ட்டி. ஆனால் என் வகுப்புத் தோழன் துட்டுப் பார்ட்டி இன்னொருவனும் இருந்தான். தாசில்தார் பையனான அவன் வகுப்பில் முன் பெஞ்சு மாணவன். அவனும் டைப்ரைட்டிங் கிளாஸ் வந்தான் என்றாலும் அவன் வருவதும் தெரியாது, போவதும் தெரியாது. பள்ளி செல்லும்போதும் வரும்போதும், தட்டச்சுப் பயிற்சி வகுப்புக்கும் எங்களுடன் சைக்கிளில் குழுவில் அவனும் வருவான் என்றாலும் நேரே வீடு சென்று விடுவான். நாங்கள் அடிக்கும் வெட்டி அரட்டையில் கலந்துகொள்ள மாட்டான். அதனாலேயே இப்போது நல்ல நிலையிலும் இருக்கிறான்!

ஆனால் இந்த வட்டாரப் போக்கு வரத்து அதிகாரி பையன் என் பக்கத்து இருக்கையை எடுத்துக்கொண்டு மெஷினை 'டபடப'

என்று சப்தப்படுத்துவான். டப்பு டுப்பென்று அடித்தால் இன்ஸ்டிரக்டர் அருகில் வந்து விடுவார். "தம்பி... மெஷின் பத்திரம்....". அவர் கவலை அவருக்கு. அதை வைத்துதானே அவர் பிழைப்பே... அதிகாலை வகுப்புகளுக்குப் போகும்போது அவர் ஒவ்வொரு மெஷினையும் துடைத்து, தடவி தயார் செய்ய வேண்டுமே...




அவன் வந்து சேர்ந்ததற்கு காரணம் பின்னால் தெரிந்தது! பள்ளி இறுதி வகுப்புப் படித்துக் கொண்டிருந்த ஒரு பெண். ஆனால் பாருங்கள் அவள் இவனை லட்சியமே செய்வதில்லை. அவள் வரும் நேரம் என் பயிற்சி நேரமாக இருந்திருக்கிறது. அவளுக்குப் பின்னே இருக்கும் மெஷினை எடுத்துக் கொண்டான் இவன்.

ஒரு விசேஷம் என்ன என்றால் இரண்டு இரண்டு வயது குறைவில் அவள் வீட்டில் ஒரே ஜாடையில் ஜெராக்ஸ் மெஷினில் எடுத்தது போல பெண்கள் இருப்பார்கள். அதில் இவன் ஆள் மாறாட்டத்தில் இங்கு வந்து இணைந்தது ஒரு கதை என்றால் அங்கு

வகுப்பில் மூன்றாவதாக இன்னொரு பெண்
இவனை நோட்டமிட ஆரம்பித்ததோடு, அதன் காரணமாகவே
ஒரு அடிதடி, பஞ்சாயத்து நடந்ததுதான்
சுவாரஸ்யம். எங்களுக்குள்ளான எல்லை பஞ்சாயத்தில்
கூட்டம் காட்டும் சைக்கிள் குழுவில் என்னையும்
அழைத்துப் போயிருந்தான். முடிந்தவரை தள்ளி
நின்றிருந்தேன்! ஒரு ஆபத்து என்றால் அப்படியே
சைக்கிளைத் திருப்பிக் கொண்டு எஸ்கேப் ஆகிவிடலாம்
பாருங்கள்....

அந்த டைப்ரைட்டிங் தேறியது வேலையில் சேர்வதில்
எனக்கு எந்த பயனும் தரவில்லை. ஆனால் சேர்ந்த
வேலையில் பல சமயங்களில் நல்ல பெயர் வாங்கித்
தந்திருக்கிறது. தமிழ் ஆங்கிலம்
இரண்டுமே ஹையர் பாஸ். ஹிந்தி டைப்ரைட்டிங்கும்
செல்ல ஆரம்பித்தபோது வந்தது வினை. அது வேறு
கதை! அது ஆரம்பத்திலேயே நின்று போனது.



பாரதியாருக்கு கணக்கு பிணக்கு போல எனக்கு வராதது சுருக்கெழுத்து! எவ்வளவு முயன்றும் அந்த நுணுக்கமான வளைவுகள் எனக்கு வரவில்லை. இன்ஸ்டிரக்டர் வெறுத்துப் போனதுதான் மிச்சம். கூரான பென்சில் எடுத்துக்குங்க... இவ்வளவுதான் இழுக்கணும், கொஞ்சம் மாறினா எழுத்து மாறிடும் என்றெல்லாம் சொல்ல குழப்பம்தான் மிச்சம்!

டைப்ரைட்டிங் கற்றுக்கொண்ட காலங்களில் ஏ பி சி டி யைத் தலைகீழாக அடிப்பது ஒரு பயிற்சி என்பதால் அதை தலைகீழாகச் சொல்வது எளிதாக வரும். அதை வைத்து வெட்டியாகக் கொஞ்ச காலம் அலட்டிக் கொண்டது நினைவுக்கு வருகிறது! என் சகோதரி டைப்ரைட்டிங் வகுப்பு செல்லாமலேயே ஏ பி சி டியை தலை கீழாகச் சொல்லி என் பெருமை வேருக்கு வெந்நீர் ஊற்றினாள்!

கல்லூரிக் காலங்களில் வேலைக்குப் போவது தவிர ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வெவ்வேறு சிறு ஆசைகள் இருக்கும். சிலபேர் நல்ல சைக்கிள் வாங்கி சுற்றவேண்டும் என்றோ, பைக் வாங்கி அலப்பறை கொடுக்கவேண்டும் என்றோ சின்னச்சின்ன ஆசைகள் இருக்கும். சிலர் நோட்டும் கையுமாக அலைவார்கள். எங்கெங்கு மரங்கள் தென்படுகிறதோ அங்கு அமர்ந்து அந்த நோட்டில் கவிதை எழுத ஆரம்பித்து விடுவார்கள்!



அதில் தப்பில்லை. ஆனால் அதைப் படிக்கும் வாசகர்களாக நம்மை மாற்றும்போதுதான் கொஞ்சம் கஷ்டம்.

"அதை யார் சொல்வது" என்று கீதா அக்காவின் மைண்ட் வாய்ஸ் கேட்கிறது! இப்போது நான் எழுதுவதை நீங்கள் படிக்கா விட்டால் எனக்குத் தெரியப் போவதில்லை. ஆனால் அப்போது இரண்டு மூன்று நண்பர்களுக்கிடையே இருக்கும்போது அதைப் படித்தே ஆகவேண்டும். அபிப்ராயம் சொல்லியே ஆகவேண்டும்! படிக்கும் காலத்தில் உங்கள் அனைவருக்குமே இல்லாத அனுபவங்களா?!!

என் நண்பன் புகழேந்தி என்று ஒருவன் இருந்தான். அவன் ஒவ்வொரு பாடநோட்டிலும் "பிடியிழந்த அரிவாள் போல பிறை நிலவு தோன்றுதம்மா" என்று எழுதி, ஒரு அரைச்சந்திரன் வரைந்து வைத்திருப்பான். நான் அந்த வரிகளில் கவர்ந்துபோய் "எங்கேடா ப/பிடிச்சே?" என்று கேட்கப்போக, என்னை முறைத்தவன் அதை அவனே எழுதியதாகச் சொன்னான். இதை முன்னரேயும் சொல்லி

இருக்கிறேன். அப்போது கூகுள் எல்லாம் இல்லாததால் என்னால் தேடிப்பார்க்க முடியவில்லை! நம்பவும் முடியவில்லை.

நான் கொஞ்சம் பாடுவேன். ஆனால் நண்பர்களிடம் பாடிக்காட்ட மாட்டேன். ஒருமுறை நான் "அந்தப் பக்கம் வாழ்ந்தது ரோமியோ" பாடலைப் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்ட என் நண்பன் "அப்படியே பாடறேடா" என்றதும் புளங்காகிதமாகிப் போனது நினைவுக்கு வருகிறது. தேடிச்சென்று யாரையும் துன்புறுத்தியதில்லை!

என் நண்பர்கள் இருவர் இருந்தனர். ஒருவன் ராமமூர்த்தி. இன்னொருவன் ப்ரகாஷுபாபு.

இருவருக்குமே ஒரே மாதிரி லட்சியம் அல்லது ஆசை. பேச்சாளர்கள்!



அவர்களைக் கண்டாலே நாங்கள் ஓடி சந்தில் மறைந்துவிடுவோம்! எங்களை முன் நிறுத்திக் கொண்டு எங்களைப் பார்வையாளர்ர்களாக்கிக்

கொண்டு கையைக் காலை ஆட்டி பேச ஆரம்பித்து விடுவார்கள். முன்னால் கற்பனையாக ஒரு மைக்.

இதில் ராமமூர்த்தி ஆவேசப் பேச்சாளர். ஆரம்பிக்கும்போதே சீற்றத்துடன் ஆரம்பிப்பான். போகப்போக பேச்சில் வெறி ஏற்றிக்கொள்வான். பேச்சுப்போட்டியா ஏச்சுப்போட்டியா என்று சந்தேகிக்கும் அளவுக்கு சமயங்களில் ஏசுவான்! அவன் முடிக்கும் நேரத்துக்காக நாங்கள் பயத்துடன் காத்துக் கொண்டிருப்போம்.

ப்ரகாஷுபாபு நேர் எதிர்.. சௌராஷ்டிரப் பையன். அமைதியான உருவம். பேச்சும்! ஆனால் நகைச்சுவை கலந்து பேசுகிறேன் என்று எங்களைப் படுத்துவான். பெரும்பாலும் அவன் நகைச்சுவைகளுக்கு அவன்தான் சிரிப்பான். மாட்டிக்கொள்ளும் நாங்கள் உம்மென்றிருந்து எங்கள் மௌன எதிர்ப்பைத் தெரிவித்துத் தப்பிக்கப் பார்ப்போம்.

ஆனால் ஒன்று. இருவருமே பள்ளியின் சார்பில் ஆங்காங்கே நடக்கும் பேச்சுப்போட்டிகளில் பங்குகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். ராமமூர்த்தி சில பரிசுகளும் வாங்கி இருக்கிறான். பள்ளி இலக்கிய விழாக்களில் பேசும்போது, பேச்சை முடித்து ஆவேசம் தணிந்து நெற்றியில் ஒரு முடிக்கற்றை புரள அவன் மேடையிலிருந்து இறங்கி வந்து எங்களுடன் பேச ஆரம்பிப்பான். "எப்படிப் பேசினேன்டா....?"

அது மாதிரி சந்தர்ப்பங்களில் நாங்கள் இருவரையுமே ஊக்கப்படுத்தத் தவறுவதில்லை. எங்களுக்கு பிரமிப்பாகவும் இருக்கும்.

இந்த வகையில் என்று சொல்லாமல் எனக்கும் ஒரு ஆசை இருந்தது.

(அது என்ன? - அடுத்த வாரம் பார்ப்போம்!)

---

**கவிதை :**

இதோ வரப்போகிறது என்றார்கள். அடுத்த இரண்டு நாட்கள் சென்னை உட்பட தமிழகம் நனையும் என்றார்கள்.
வழக்கம்போலவே காணாமல் போனது புயலும்
மழையும்... மேற்கு வங்கம் மாட்டியது!



இங்கு வேண்டாம்...
இங்கில்லை...
இங்கும் வேண்டாம்..
எங்கு பொழியவேண்டும்
என்கிற முடிவு
தங்களிடம் இருப்பதாகவே
நம்பி
நகர்ந்துகொண்டிருக்கின்றன மேகங்கள்.

**பொக்கிஷம் :**

**இது என்ன பாடல் காட்சி என்று சொல்ல முடிகிறதா?**



---

பலசரக்கு :

**சொந்தமா சைக்கிள் வைத்துப் பார்த்திருப்பீர்கள்.... பைக் வைத்துப் பார்த்திருப்பீர்கள்... விதம் விதமாக கார் வைத்துப் பார்த்திருப்பீர்கள்.. சிலர் சொந்தமாக ஆட்டோ வைத்திருப்பார்கள்.. ஏன், சிலர் லாரி கூட வைத்திருப்பார்கள்.... இப்போதெல்லாம் சொந்த பிளேன் கூட வைத்திருக்கிறார்கள்!**

**ஆனால்,**

**சொந்தமாக ரயில் வைத்திருந்து பார்த்திருக்கீங்களா? பார்த்திருக்கீங்களா? பார்த்திருக்கீங்களா?!!!**

## உலகில் ஒருவரே!




ரோம் நகரத்துக்கு அருகில் ஒரு சிறுகிராமம்! அங்குள்ள ஒரு வீட்டின் முன், ரயில் எஞ்சின் ஒன்று நிற்கிறது. வேடிக்கை பார்க்க எப்போதும் சிறுவர் கூட்டம்.


இதோ! வீட்டில் இருந்து ஜீனோ குலியானி என்ற 50 வயதுக்காரர் வெளியே வந்து, எஞ்சினில் ஏறுகிறார். 'கூ'வென்று கத்தி விட்டுப் புறப்படுகிறது எஞ்சின். 300 கெஜ தூரத்தை மூன்றரை நிமிடத்தில் ஆமை வேகமாகக் கடந்து, ஒரு ஹோட்டல் முன் வந்து நிற்கிறது. அதற்குள் நுழைந்து ஜினோ காப்பி குடித்து விட்டு, எஞ்சினில் ஏறி வீடு திரும்புகிறார்!

இப்படி தன் உபயோகத்துக்கு என்று எஞ்சினை வைத்துள்ள தனி நபர் உலகில் இவர்தான்! இவர் முன்பு ரயில்வேயில் மெக்கானிக்காக வேலையில் இருந்தார். இவர் ரிடையர் ஆனபோது காயலான் கடையிலிருந்து பழைய எஞ்சின் பாகங்களை வாங்கி, ஒரு எஞ்சினையே செய்து கொண்டார். தன் வீட்டில் இருந்து காபி ஹோட்டல் வரை தண்டவாளம் அமைத்துக் கொண்டு, மணிக்கு மூன்று மைல் வேகத்தில் எஞ்சினை ஓட்டவும் அனுமதி பெற்றார்.

"நான் எஞ்சின் ஓட்டிக் கொண்டு போவதை கிராம மக்கள் அதிசயத்துடன் பார்க்கிறார்களே! ஆகா! என் நீண்ட நாள் ஆசை நிறைவேறி விட்டது!" என்கிறார் ஜினோ!

ஆதாரம்: டிட்பிட்ஸ்.

**இந்த ஓவியத்தை வரைந்தது யாராயிருக்கும் என்று யூகிக்க முடிகிறதா? நா(ன்)ம் நகைச்சுவைத் துணுக்குகளை மட்டுமே படம் வரைந்து பார்த்திருந்த வாணி! அவர் வரைந்திருப்பது அஷோக் மேத்தாவை.**



**இதே மாதம்... ஆனால் 25 ஆம் தேதி... நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்...**



**Sriram Balasubramaniam**
August 24, 2014 at 7:38 PM ·

பழங்கணக்கு :

ஜூன் 25, 1975 அன்று அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டது. 26, 27 (வியாழன், வெள்ளி) ஆகிய இரு தினங்கள் டெல்லியில் எந்தச் செய்தித் தாளும் வெளி வரவில்லை. ஜூன் 28 சனிக்கிழமை வெளிவந்த டெல்லி தினசரிகளில் "மின்சார சப்ளை கிடைக்காததால்" இதழ்களை வெளிக்கொணர முடியவில்லை என்று அந்தப் பத்திரிகைகள் வருத்தம் தெரிவித்திருந்தனவாம்!

மக்களும் நம்பிட்டாய்ங்க போல!



INDIAN HERALD

SPECIAL SUPPLEMENT

EMERGENCY DECLARED

JP, Morarji, Advani, Asoka Mehta & Vajpayee arrested


# புத்தக விமர்சனம்



## இரா. அரவிந்த்

இரு வீடு ஒரு வாசல்: வெற்றிகரமான மணவாழ்வின் எளிய சூத்திரம்: நாடக அறிமுகம்.

"வீட்டைக் கட்டிப்பார். கல்யாணம் பண்ணிப்பார்" என்பது அனுபவம் நிறைந்த பெரியோரின் வழக்கமான சொல்லாடல். எக்காலத்திலும் எல்லாரிடமும் எழும் விவாதம், "திருமணவாழ்வு வெற்றிகரமாக அமையும் ரகசியம் என்ன என்பதே.




**பெற்றோர் தீர்மானிக்கும் திருமணங்களை விரும்பாமல் காதல் திருமணங்கள் பெருகிவரும் பொருளியல் சுதந்திரம்**

**மிகுந்துள்ள இன்றைய சமூகத்தில்தான் மணமுறிவுகளும் பெருகுவதோடு அது இருவகை திருமணங்களிலும் கணிசமாக நிகழ்வதுதான் விந்தையான வேதனை.**

**மகிழ்ச்சியான மணவாழ்வு நடத்துபவர்களாலும் எளிதில் விளக்கிவிட முடியாத இச்சிக்கலான சமூக அமைப்பின் மர்ம முடிச்சுகளை அநாயசமாக அவிழ்த்திருக்கிறது திரு பாம்பே கண்ணன் அவர்கள் 1980 களில் எழுதி இயற்றிய "இரு வீடு ஒரு வாசல்" நாடகம்.**

**"கடவுள் நிறைய மூளைய குடுத்திருக்கார். அதுதான் பிரச்சனையே." என கதாநாயகனை விவரிக்கும் கதாசிரியர் குரலான தரகர் ராஜுவின் வசனத்திற்கேற்ப நாயகன் ரமேஷ், "காதல் கல்யாணம் காமத்தை அடியொற்றியது, பெற்றோர் நிச்சயிக்கும் திருமணமோ முகம் தெரியாத எவளையோ தலையில் கட்டிவைப்பது. எனவே கல்யாணத்திற்கு முன் ஒத்திகை" என்னும் புது யுக்தி/உத்தியைச் சொல்கிறார்.**

**அதற்குச் சிறிதும் சளைக்காத பொருளியல் சுதந்திரம் மிக்க வங்கி அதிகாரி நாயகி மைதிலியோ, தம் பணிமாறுதலுக்கேற்ப மாப்பிள்ளை தம் பின் வரவேண்டும் என்று தொடங்கி ஏட்டிக்குப் போட்டியாகப் பல நிபந்தனைகளை வைக்க இவர்களுக்குத் திருமண வாழ்வின் சூட்சமங்களைப் புரியவைப்பதில் தரகர் ராஜு எந்த அளவு வெற்றி பெறுகிறார் என்பதே நகைச்சுவை நிறைந்த இந்நாடகத்தின் சுவாரசியம்.**

**பட்டப்படிப்பு முடித்தவர் தம் படிப்பிற்கு சம்பந்தமில்லாத பணியில் சேர்வது, கை நிறைய சம்பாதிக்கும் பெண்ணிற்கு ஏற்ற மாப்பிளையைத் தேடுவது போன்ற இன்றைய நடைமுறைச் சிக்கல்களைக் கிட்டத்தட்ட 34 ஆண்டுகளுக்கு முன்பே திரு பாம்பே கண்ணன் அவர்கள் எடுத்துக்காட்டிய**

நாடகம் இன்றைய முகத்திற்கும் பொருந்துவதில் என்ன வியப்பு இருக்க முடியும்?

ஒரே மாதிரியான குணாதிசயங்களைக் கொண்டோரே சிறந்த தம்பதிகளாவர் என்று நம்பும் இளைஞர்கள் புரிந்துகொள்ளத் தவறுவதைச் சுட்டிக்காட்டுவது "உப்பு புளி காரம் மூணும் சேர்ந்தாதான் குடும்பம் என்கிற சாம்பார் மணக்கும். வெல்லமும் சக்கரையும் தித்திப்புதான். ரெண்டும் சேர்த்து பாயசம் வச்சா திகட்டிரும் என்ற தரகர் ராஜுவின் வசனம்.

"ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிட்டுதான் கல்யாணம் பண்ணிக்கணும்னா, அந்த ஆதாம் ஏவாளுக்கு அப்பறம் யாருமே கல்யாணம் பண்ணியிருக்க மாட்டாங்க" என்று தொடங்கி இறுதிக் காட்சியில் வரும் வாழ்வின் எதார்த்தத்தைப் பதார்த்தமாக புரியவைக்கும் வசனங்கள் எல்லோருக்கும் எக்காலத்திலும் பாடமாக அமையும்

அனுபவப் பதிவுகள்.

"பொருட்களை வாங்கும் முன் மாதிரியைச் சோதிக்கும் உத்தி வாழ்வின் அனைத்துக் கட்டங்களுக்கும் பொருந்துமா"? "இரு வீடுகளுக்கு ஒரு வாசலை உருவாக்கும் திருமணத்தின் வெற்றிக்கான எளிய சூத்திரம் என்ன"? அறிய அனைவரும் இந்நாடகத்தை இணையம் மூலமே வாங்கி, கேட்டு, மகிழ கீழ் காணும் எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்.



**திரு பாம்பே கண்ணன் அவர்கள்: +91 9841153973.**

**நட்புடன்**

**இரா. அரவிந்த்.**




கவிதைப்
பக்கம்

# “ராட்ஷசன்”

:: ஜீவி ::




கொள்ளி வாய்ப் பிசாசு மாதிரி பிர்மாண்டமாய்
கொண்டையில் முன் விளக்கு இரண்டும் பளீரிட
இருட்டில் நின்று கொண்டிருந்தது அது.

பயபக்தியுடன் சுற்றி வந்து
கட்டிடக் காவலாளரை நெருங்கி
பெயர் கேட்டேன்.
"அதுவா?.. 'பொக்லைன்' என்றார்
பான்பராக்கை, உமிழ்ந்தவாறு.

"அப்படீனா?"
"பள்ளம் பேத்து மண்ணை
வாரிப் போடும் ராட்ஷசன்"
என்றார், சிரித்தவாறு.

அடுத்த நாள் ராட்ஷசனைப்
பகல் நேரத்தில் பார்த்ததில்
'அம்மாடீ' என்று அதிசயத்துப் போனேன்
எம்மாம் பெரீய்ய கைகள்?..
சும்மா சொல்லக் கூடாது
தோண்டும், தூக்கும், தூக்கிக் குவிக்கும்
நறுவிசு நல்லாத்தான் இருந்தது.

ராட்ஷசன் பக்கத்தில்
அதன் பிர்மாண்டத்திற்குப்
பொருந்தாதவாறு
மனுஷர்களும், மனுஷிகளும் கூட
மண்ணைச் சுமந்து சென்றபடி.....
பெரிய பெரிய இரும்புக் கைகளுக்குகருகில்
சின்னச் சின்ன மனுஷக் கைகள்
ரெண்டுக்கும் முடிச்சு போட்டு
மனம் பரிதவித்தது

ஒருநாள்
பொக்லைன் வரவில்லையாம்
பொசுக்கென்று வேலை நின்று விட்டது
மனுஷர்களும், மனுஷிகளும் மட்டும் தான்
இயந்திரக் கைகளுக்குப் பதில்
உயிர்க் கைகள் மட்டும் தான்
இருக்கவே இருக்கார் வாட்ச்மேன்
"என்னாச்சு பொக்லைனுக்கு?" என்றேன்
இப்பொழுதும் பான்பராக்
எச்சிலூடே சொன்னார்:

**கூலி கூட வேண்டுமென்று**
**பொக்லைன் ஓட்டுநர்கள்**
**கொடி பிடித்து விட்டார்களாம்!**
**அதுவரை மனுஷன் மனுஷிகள் தானாம்!**

**மனசுக்குள் மத்தாப்பு இப்போது**
**மனுஷக் கைகளின் மகிமை தெரிந்தது**
**இரும்புக்கை ராட்ஷசனுக்குப் பின்னால்**
**மனுஷக் கைகளும் இருப்பது தெரிந்தது**
**ராட்ஷசனை இயக்கும் மனுஷக் கைகள்**
**இல்லை என்றால்**
**ராட்ஷசனும் இயங்க மாட்டான் என்று**
**இப்போது தான் தெரிந்தது.**

---

மின் நிலா ஆசிரியர் குழுவிற்கு:

வணக்கம்.

மேற்கண்ட கவிதையை வெளியிட்டு வாசகர்களிடமிருந்து கவிதை கேட்டு மின் நிலாவில் கவிதைப் பகுதியை ஆரம்பித்து வைக்கலாம். கவிதைப் பக்கம் என்று அந்தப் பகுதிக்குப் பெயர் கொடுக்கலாம்.

இந்தப் பகுதியில் வெளியிடும் கவிதைகள் எங்கள் பிளாக் பதிவுகளின் பிரதியாக இல்லாமல் மின் நிலாவுக்காகவே வெளியிடும் கவிதைப் பக்கமாக இருந்தால் மின் நிலாவில் பிரசுரமாகும் புது விஷயம் போலத் தோற்றம் கொடுக்கும்.


நாளாவட்டத்தில் மின்நிலாவிற்கென்றே பிரத்யேகமாக இந்த மாதிரி இன்னும் ஓரிரண்டு பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

அன்புடன் .... .... ஜீவி

# அன்று காதல் கண்கொண்டு நீ பார்த்த பார்வை இன்று கனியானதோ...

**கோமதி சுப்பிரமணியம் எழுதிய கதையை கே எஸ் கோபாலகிருஷ்ணன் இயக்க 1970 இல் ஜெமினி கணேசன், ரவிச்சந்திரன், சரோஜா தேவி நடிப்பில் வெளியான திரைப்படம் மாலதி.**

**கண்ணதாசன் பாடல்களுக்கு கோவர்தனம் ஜோசப் கிருஷ்ணா உதவியுடன் எம் எஸ் விஸ்வநாதன் இசை அமைத்த படம்.**




**படத்தில் தேங்காய், நாகேஷ், கௌரவ வேடத்தில் சந்திரபாபு போன்றோரும் நடித்திருக்கிறார்களாம். கதையைப் படித்தால் சோகக்கதையாய் இருக்கும் போல!**



**இதில் இரண்டு SPB பாடல்கள் இருக்கின்றன. இரண்டுமே சுசீலாவுடன் பாடும் டூயட். ஒன்று மிகச் சுமார் ரகம். இன்று பகிரும் பாடல் நல்லதொரு பாடல். எளிமையாக, அதே சமயம் சிறப்பாக மனதில் அமரும் பாடல். இளமையான எஸ் பி பி குரல்.**

*கற்பனையோ கைவந்ததோ..*
*சொர்க்கத்தில் காணாத சுகமோ சுகம்..*
*சுகமோ சுகம்... சுகமோ சுகம்...*

*அன்று காதல் கண்கொண்டு நீ பார்த்த பார்வை*
*இன்று கனியானதோ*
*என்ன சுகமோ சுகம்*

*உந்தன் கையில் விழுந்தேனோ*
*கன்னிக்கனியே*
*இல்லை கள்ளில் விழுந்தேனோ*
*செல்லக்கிளியே*
*யாரும் சொல்லித்தெரியாத*
*இன்பக்கலையே*
*அதை அள்ளிக்கொள்ள வந்தேன்*

*தன்னந்தனியே*
*பார்த்தது போதுமா கேட்டது வேண்டுமா*
*சுகமோ சுகம்... சுகமோ சுகம்...*

*ஒரு கோடி தாமரை கொடியோடு வளைத்து*
*என்னைச் சிறை செய்ததோ*
*என்ன சுகமோ சுகம்..*
*என்னைக்கட்டி வைத்த விலங்கோ கண்கள் இரண்டும்*
*அங்கு வெட்டிவைத்த கரும்போ கன்னம் இரண்டும்*
*உன்னைக் கண்டு கண்டு ரசித்தே*
*என்னைக்கொடுத்தேன்*
*அங்கு காதல் என்னும் அமுதை அள்ளிக்குடித்தேன்*
*பார்த்தது போதுமா கேட்டது வேண்டுமா*
*சுகமோ சுகம்... சுகமோ சுகம்...*



# வேண்டாம் போதை... போவோம் இனி நல்ல பாதை...

1) நன்றி ஐயா ஆனால் உங்களிடம் கொடுப்பதற்கு என்னிடம் பணம் ஏதும் இல்லை என்கிறார் பயணி.

நீங்கள் கொடுத்தாலும் நான் பணம் வாங்குவதில்லை இந்த கொரோனா காலத்தில் புலம் பெயர்ந்த தொழிலாளிகளுக்கு என்னால் முடிந்தது எல்லாம் இந்த சுமையை இலவசமாக சுமப்பதுதான் என்றவர் பயணியின் சுமையைத் தூக்கிக் கொண்டு ரயில் நிலைய வாசலை நோக்கி நடக்கிறார்.

யார் இவர்.

பெயர் முஜிபுல் ரஹமான் எண்பது வயதாகிறது கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இதே ரயில் நிலையத்தில் போர்ட்டராக வேலை செய்கிறார் உழைத்துதான் சாப்பிடவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்.



2) இதுவும் ஒரு பெருமைதான்.... நாம் சென்ற வாரம் பார்த்த செய்தியின் தொடர்ச்சி... பிரதமர் மோடி, 'மன் கீ பாத்' நிகழ்ச்சியில் பாராட்டிய, மதுரை சலூான் கடைக்காரர் மோகன் மகள் நேத்ரா, 14, என்பவரை, ஏழைகளுக்கான நல்லெண்ண துாதராக, ஐ.நா., சபை அறிவித்துஉள்ளது.



3) விருதுநகர் அருகே நாராயணபுரத்தில் மழை நீரை சேமித்து அதன் மூலம் நிலத்தடி நீராதாரம் பெற்று வருகின்றனர் கிராம மக்கள் .இதனால் இங்கு குடிநீர் தட்டுப்பாடானது இல்லாமல் உள்ளது.



4) "...... கொரோனா அது இதுன்னு சொல்றாங்க. கடையை திறந்து வியாபாரம் பார்க்கக் கூடாதுன்னு சொன்னாங்க. அவங்களுக்காக கடையை அடைச்சா, என்னை நம்பி வரும் ஏழை விவசாயிகளுக்கு யாரு சாப்பாடு போடுவாங்க என நினைத்து, இட்லி அவித்து கொடுக்கிறேன்.

இந்த காலத்திலும், 1 ரூபாய்க்கு, ஒரு இட்லி போடுறேன்னு தெரிந்து, பலர் பல வித உதவிகளை செய்து வருகின்றனர்....." - ஒரு ரூபாய்க்கு இட்லி, சட்னி, சாம்பார் வழங்கும், கோவை மாவட்டம், வடிவேலம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த, 85 வயது கமலாத்தாள்.




5) பட்டுக்கோட்டையில், 91 வயதாகும் டாக்டர் கனகரத்தினம், தனக்கு சொந்தமான கட்டடத்தில், கடைகள் வைத்திருக்கும் வியாபாரிகளிடம், மூன்று மாத வாடகை பணம், 4.20 லட்சம் ரூபாய் வேண்டாம் என்று கூறி, மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தி உள்ளார். இவர் ஏற்கெனவே கன்சல்டிங் பீஸாக பத்து ரூபாய்தான் வாங்குகிறார் என்று மக்களால் புகழப்பட்டவர். நம் செய்திகளிலும் இடம்பெற்றவர்.



6) கொரோனா ஊரடங்கால் ஏற்பட்ட நன்மை. இப்படி போதையிலிருந்து விடுபட்டவர்களும் இருக்கிறார்கள்.



# மதராஸ் பிறந்த கதை



ரமா ஸ்ரீநிவாசன்

நாம் வாழும் இம்மாநகர் மதராஸ் அல்லது இன்றைய சென்னை என்பது எப்போது, எப்படி, எவரால் பிறந்தது அல்லது பிறப்பிக்கப் பட்டது என்று பல முறைகள் நான் யோசித்திருக்கின்றேன். அரசுப் பணி, திருமணம், கணவன், அவரது பெரியவர்கள், பிறகு பிள்ளைகள், அவர்களின் வளர்ப்பு, பெரியவர்களின் முதுமை என்று காலம் சுழன்று கொண்டே ஓடி விட்டது. இப்போது, இரு பெண்களும் வளர்ந்து தங்கள் படிப்பிற்காக வேறு நாடு, வேறு ஊர் என்று சென்ற பின்னர், நானும் என் கணவரும் பணி ஓய்வை நெருங்கிய பின்னரும்தான் என்னால் ஆற அமர உட்கார்ந்து என்னாசையை நிறைவேற்றும் வேலையைப் பிடிவாதமாகத் தேடிக் கண்டுபிடிக்க முடிந்தது.

பழைய நாளிதழ்கள், பழைய புத்தகங்கள் யாவையையும் எடுத்துப் புரட்டி, இன்டெர்நெட்டையும் விடாமல் பார்த்து நம் மதராஸ் என்பது ஓர் அபூர்வமான ஊர் என்பதை புரிந்துகொண்டதிலிருந்து என் நண்பர்களான உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் இக்கட்டுரையை வரைகின்றேன்.

மதராஸ் ஜனித்த கதை ஓர் மாபெரும் ஆச்சரியம் மற்றும் அதிசயமான நிகழ்வு என்றால் அது பொய்யல்ல. முதலில் ஃப்ரென்ச் ஆட்சியிலிருந்து டட்ச் ஆட்சிக்கும் பிறகு போர்ச்சுகீஸ் ஆட்சியிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சிக்கும் மாறி மாறி உட்பட்டதால், அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வழிப்படி நம் மதராஸை வளர்த்தார்கள்.

இந்திய நாட்டின் மிக முக்கியமான முதல் ஆங்கிலேயக் குடியிருப்பு மதராஸில் உள்ள ஜார்ஜ்டௌனில்தான் துவங்கியது. முதலில் இவ்விடம் “ப்ளாக் டௌன்” என்றே அழைக்கப் பட்டது. இதுதான் மதராஸ் நகரிலேயே மிக நெரிசலான மனிதர்கள் மிக்க இடமாக இருந்தது, இன்றும் இருக்கின்றது. முற்காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி இந்த ஜார்ஜ் டௌனுக்கு மதராஸ் சரித்திரத்தில் ஓர் மறுக்க முடியாத, மறக்க முடியாத இடம் செதுக்கப் பட்டுள்ளது.





ஆயின் இதன் பெயரும் சூழலும் எவ்வாறு “ப்ளாக் டௌன்”னிலிருந்து “ஜார்ஜ் டௌன்”னாக மாறி மருவியது என்பது ஒரு சுவையான நாடகமிக்கக் கதை. அதை இப்போது பார்ப்போம்.

ஃப்ரான்சிஸ் டே, ஆன்ரு கோகன் என்னும் இரு ஆங்கிலேயர் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் பிரதிநிதிகளாக மதராஸ் வந்தடைந்தனர்.

அவர்களின் முதலாயக் கடமை கம்பெனியின் விற்றல் வாங்கலுக்கான ஒரு தொழிற்சாலை மற்றும் ஒரு கிடங்கு கட்டுவதற்கான இடத்தை தேர்ந்தெடுப்பதுதான். ஆகஸ்ட் 22ஆம்

தேதி 1639ல் இந்தியாவால் கடற்கரையோரத்தில் ஓர் சிறிய இடம் இரண்டு வருடங்களுக்கு மட்டுமே அவர்களுக்காக ஒதுக்கப் பட்டது.

ஆங்கிலேயர்களின் வணிகப் பரிமாற்றம் வசதியாக நடக்க 1653ல் அவ்விடத்தில் ஓர் கோட்டை அவர்களால் அமைக்கப் பட்டது. அதற்கு இங்கிலாந்தின் உயர் புரவலர் துறவி ஜார்ஜ் (Patron Saint George) அவர்களின் பெயரையொட்டி "ஃபோர்ட் ஸெயின்ட் ஜார்ஜ்" என்ற பெயரிடப்பட்டது.



அக்கோட்டையில் வேலை செய்ய தமிழ் மக்கள் பல பேரை ஆங்கிலேயர் அமர்த்தினர். ஆகவே, நம் மக்களின் தன்னிறைவான வாழ்வாதாரத்திற்கும் இது உதவியாக திகழ்ந்தது. மதராஸ் வளர வளர, இந்நகரம் இந்தியாவிற்கும் யூரோப்பிற்குமிடையே ஓர் மிக முக்கியமான வணிகவியல் இடமாக மாறியது.

ஐந்தாம் மன்னர் ஜார்ஜ் 1911ல் இந்தியாவிற்கு வந்து சென்றதன் நினைவாக அவ்விடத்தின் பெயரே ஜார்ஜ் டௌன் என்று மாற்றப் பட்டது.

ஜார்ஜ் டௌனின் சில தெருக்களும் அவைகளின் சுவையான கதைகளும் இதோ கீழே :

செவென் வெல்ஸ் தெரு : மதராஸின் முதல் முதல் திட்டமிட்ட நீர் வாரியத் துறையின் திட்டம் இந்த செவென் வெல்ஸ் நீர்திட்டத்திலிருந்துதான் தொடங்கியது. இங்கு குடி நீருக்காக பத்து கிணறுகள் தோண்டப் பட்டன. அதில் மூன்று கிணறுகள் மிகச் சிறிதளவே நீர் ஈன்றன. எனவே, ஏழு கிணறுகள் மட்டுமே நீர் கொடுக்க முடிந்ததால் அத்தெருவின் பெயர் “ஏழு கிணறுகள் தெரு” அல்லது “ஸெவென் வெல்ஸ் ஸ்டிரீட்” என்றானது.

பர்மா பஜார் : பல இந்தியாவைச் சேர்ந்த பர்மியர்கள் பர்மாவிலிருந்து குடி பெயர்ந்து இந்தியாவிற்கு திரும்பினர். மதராஸின் பீச் ரயில் நிலையத்தையடைந்தவுடன் அவர்கள் தங்களுடன் கொண்டு வந்த பல வாரியான பொருட்களை விற்று, தங்கள் வாழ்வாதாரத்திற்கு வழி செய்தனர். இவ்வாறுதான் பர்மா பஜார் உருவானது. இன்றும் இந்த மார்க்கெட் விலையுயர்ந்த இறக்குமதி செய்யப் பட்ட வெளி நாட்டுப் பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்து கொண்டிருக்கின்றது. இதுவே “பர்மா பஜார்”



சைனா பஜார் (இப்போதைய பிரசித்திப் பெற்ற என்.எஸ்.சி. போஸ் ரோட்): பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் முதல் முதலாக இவ்விடத்தில்தான் டிராம்கள் உருவாக்கப் பட்டு ஓட்டப் பட்டன.

கொத்தவால் சாவடி : ஆசியக் கண்டத்தின் மாபெரும் சாவடிகளுள் ஒன்றாக உருவாகி பல வருடங்கள் காய் கனிகளை நமக்கு அளித்த ஒன்று.



வண்ணாரப்பேட்டை : இந்த பாதை முழுக்க வண்ணான்கள் ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஆங்கிலேயர்களின் துணிகளை துவைத்து காய வைத்து இஸ்திரி செய்து கொடுக்க வேலை செய்து கொண்டிருந்ததால் இவ்விடம் வண்ணாரப்பேட்டை என்று பெயரேற்றது.




மின்ட் தெரு (தங்க சாலை): ஈஸ்ட் இந்தியா கம்பெனி இங்கு ஓர் தங்கசாலையை நிறுவி நாணயங்கள் உற்பத்தி செய்ய வழி வகுத்தது. இந்நாணயங்கள் பொருட்கள் வாங்குவதற்கும் விற்பதற்கும் உபயோகிப்பதற்காக உற்பத்தி செய்யப் பட்டன. ஆகவே இவ்விடம் தங்கசாலை அல்லது மின்ட் தெருவாக பெயர் பெற்றது.

ஆர்மேனியன் தெரு : இது மதராஸிலேயே புராதனப் புகழ் வாய்ந்த ஓர் தெருவாகும். இங்குதான் ஆர்மேனியர்கள் தங்கள் நாட்டிலிருந்து 1750களில் இடம் பெயர்ந்து வந்து குடியேறினார்கள். இங்குதான் புகழ் பெற்ற ஆர்மேனியன் மாதா கோவிலும் ஸெயின்ட் மேரீஸ் ஆங்கிலோ இந்தியன் பள்ளிக் கட்டிடங்களும் உள்ளன. எனவேதான் இதன் பெயர் ஆர்மேனியர் தெருவானது.



ஸௌகார்பேட்டை : இவ்விடம் குஜராத் மற்றும் ராஜஸ்தானிலிருந்து வந்த மார்வாடிகளால் ஆக்கிரமிக்கப் பட்டது. “ஸௌகார்” என்றால் இந்தியில் மார்வாடி என்று பொருள். இதன் அப்பட்டமான மொழி பெயர்ப்பு “பணக்காரர்களின் இடம்” என்பதாகும். ஆதலால் ஸௌகார்பேட்டையானது.



காரல் மெர்ச்சன்ட் தெரு அல்லது பவளக்காரன் தெரு : ஆங்கிலேயருடன் பவள வியாபாரம் செய்யும் வணிகர் இத்தெருவில் ஒன்று கூடி வாழ்ந்ததால், இதன் பெயர் காரல் மெர்ச்சன்ட் தெரு என்று வழங்கியது.




மஸ்கான்சாவடி : ஆற்காட் நவாப்பின் மகனான மஹ்ஃபூஜ் கானின் இல்லத்தைச் சுற்றி ஓர் அழகிய தோட்டம் அந்நாட்களில் அமைந்திருந்தது. அங்கு வாழ் மக்கள் அத்தோட்டத்தை “திவாடி” என்றழைத்தனர். நாட்பட அப்பெயர் மருவி “மஸ்கான்சாவடி”யாகி விட்டது.

பாரீஸ் கார்னர் : தாமஸ் பாரி என்னும் வேல்ஸ் நாட்டு வணிகர் ஒருவர் 1768ல் இந்தியா வந்ததை நினைவு கூர்ந்து இப்பெயர் சூட்டப் பட்டது.

அத்தெருவின் கோடியில் அமைந்திருந்த ஓர் “பாரி” என்னும் கட்டிடம் அவ்வணிகத்திற்கு தலைமைச் செயலகமாக செயல் பட்டது. கோடியிலிருந்ததால் “பாரீஸ் கார்னர்” ஆகி விட்டது.

முடிவாக, மதராஸ் என்னும் ஊர் ஜார்ஜ் டௌனிலிருந்து பிள்ளையார் சுழி போட்டு தொடங்கியது. அதனால்தான் இன்றும் ஜார்ஜ் டௌனின் அஞ்சல் குறியீடு "மதராஸ் 600 001" என்பது.

நாட்கள் மாதங்களாகவும் வருடங்களாகவும் உருண்டோடி விட்டன. மதராஸ் என்பது இப்போது சென்னை மாநகரம் என்ற பெயரை ஏற்று பீடு நடை போட்டு வருகின்றது. இங்குதான் எத்தனை மாற்றங்கள், எத்தனை முன்னேற்றங்கள், எத்தனை இயற்கை ஆக்கிரமிப்புகள், எத்தனை பெருமை மிக்க வளர்ச்சிகள்!!!!!!



எங்கிருந்து எங்கு வந்திருக்கின்றோம் என்பதை அசை போட்டால் பிரமிப்பாகவும் அதே நேரம் பெருமையாகவும் இருக்கின்றது. அதுவும் நாம் தமிழ் நாட்டின் தலை நகரமான சென்னை மாநகரவாசிகள் என்று எண்ணும்போது சிறிது கர்வமும் கூட ஒட்டிக் கொள்கிறது. ஏனென்றால்

"எந்த ஊர் என்றாலுமே அது மதராஸைப் போலாகுமா?"

அதே போல்

"எந்நாடு என்றாலுமே அது நம் நாட்டுக்கீடாகுமா?"

==============

# பழங்கணக்கு

**கடந்த 2019 ஆம் ஆண்டு, எங்கள் ப்ளாக் வெளியிட்ட பதிவுகளில் அதிகம் பேர் படித்த பதிவு இது.**

## மைதா பகோடா - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி

### தேவையான பொருள்கள்:

*மைதா மாவு ------  11/2 கப்*
*புளித்த தயிர் ------ 1 கப்*
*பச்சை மிளகாய் --- 2 அல்லது 3*
*இஞ்சி ------                ஒரு சிறு துண்டு*
*கறிவேப்பிலை ---- சிறிதளவு*
*பொரிப்பதற்கு எண்ணெய் ----- தேவையான அளவு*
*உப்பு -------   தேவையான அளவு*

*செய்முறை:*

*பச்சை மிளகாய், தோல் சீவப்பட்ட இஞ்சி இவைகளை பொடியாக அறிந்து கொள்ளவும்.*




*அதில் மைதா மாவு, உப்பு சேர்த்து கலந்து விட்டு, தயிரை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி பிசையவும்.*




2019-2-11 17:22




*மாவு கைககளில் ஒட்டிக் கொண்டால், கொஞ்சம் எண்ணெய் ஊற்றி பிசைந்தால் சரியாகி விடும்.*




*அடுப்பில் வாணலியில் எண்ணெய் வைத்து, அது காய்ந்ததும் பிசைந்து வைத்துள்ள மாவை கிள்ளி, போட்டு, ஓசை அடங்கியதும் எடுக்கவும்.*




*வடி கூடையில் டிஷ்யூ பேப்பரை போட்டு அதில் பொரித்த பகோடாக்களை போட்டால், அதிகப்படியான எண்ணையை அது உறிஞ்சி கொண்டு விடும்.*

*சுவையான, மிருதுவான பகோடா ரெடி.*

**இந்த வார மின் நிலா பற்றிய உங்கள் கருத்துகளை,**

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.**

**நன்றி.**

**வணக்கம்.**

## உங்களைப்பற்றி நீங்கள் ...

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.**

**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**

**engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.**

**எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**

**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**

**மின்நிலாவுக்கு கதை, கவிதை, கட்டுரை, விளம்பரங்கள் அனுப்புவோர்,**

engalblog@gmail.com

**என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.**

**இவை யாவுமே இலவச சேவை என்பதால்,
பிரசுரமாகும் எதற்கும் சன்மானம் எதுவும் கிடையாது.**

**எங்கள் ப்ளாக் வாசகர்களின் படைப்புகள் / விளம்பரங்கள் மட்டுமே முன்னுரிமை பெறும்.**

மின்நிலா 004

